# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 221/மா/2017

ஆணை எண்: 262/2017

நாள்: 21/11/2017

உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை),
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
பூந்தமல்லி பிரிவு, ஆவடி, சென்னை – 600 054.

– முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–11, வளசரவாக்கம்,
சென்னை பெருநகர மாநகராட்சி.

– எதிர் மனுதாரர்

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி நெடுஞ்சாலைப் பிரிவின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உதவிப் பொறியாளரின் 28.03.2017 நாளிட்ட கடிதம் இம்முறைமன்ற நடுவத்தில் 31.03.2017 அன்று பெறப்பட்டு 221/2017/மா எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் 11வது மண்டலத்தில் இராமாபுரம் பகுதியில் நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) மூலம் பாரதி சாலை விரிவாக்கம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெறுவதால் சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள ராமாபுரம் சர்வே எண்.239/2 ஏரிப் புறம்போக்கில் கடைகள் மற்றும் வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ள அமைப்புகளை அகற்றித் தருவதற்கு தேவையான அறிவுரைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்குமாறு முறையீட்டுக் கடிதத்தில் பூந்தமல்லி நெடுஞ்சாலை உதவி பொறியாளர் இம்முறைமன்றத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இம்முறைமன்ற நடுவத்தின் 05.04.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டாளரின் கடிதத்தில் கண்டுள்ள பொருள் குறித்து பதிலுரையைச் சமர்ப்பிக்குமாறு வளசரவாக்கம் மண்டலம் –11ன் மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

3) சென்னைப் பெருநகர மாநகராட்சி வளசரவாக்கம் 11வது மண்டல உதவி செயற் பொறியாளரும், பூந்தமல்லி பிரிவு நெடுஞ்சாலைத்துறை உதவிப் பொறியாளரும் 20.11.2017 அன்று இம்முறைமன்ற நடுவர் முன்பாக நேரில் ஆஜராகி <u>வாக்குமூலம் அளித்தனர்.</u> விசாரணையின் போது நெடுஞ்சாலைத்துறை உதவிப் பொறியாளரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து, நெடுஞ்சாலைத்துறை உதவிப் பொறியாளர் 21.11.2017 அன்று காலை 11 மணிக்கு வளசரவாக்கம் மண்டல அலுவலகத்தில் மாநகராட்சி உதவி செயற்பொறியாளருடன் அமர்ந்து பேசி, ஆக்கிரமிப்புகளை அகற்றிட இருதுறைகளுக்கும் இணக்கமான அண்மைத் தேதி ஒன்றை நிர்ணயம் செய்து, பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு உரிய காவல் துறை அலுவலரிடம் முன்பே தகவல் தெரிவித்து ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகளை விரைவுப்படுத்த ஒப்புக்கொண்டனர்.

4) சென்னை மாநகராட்சி வளசரவாக்கம் 11–வது மண்டலத்தில் இராமாபுரம் பகுதியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அவசியமான பாரதிசாலை விரிவாக்கம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை விரைவுபடுத்தும் நோக்கில் 20.11.2017 அன்று நடைபெற்ற இம்முறைமன்ற நடுவ விசாரணையின் போது சென்னை பெருநகர மாநகராட்சி வளசரவாக்கம் மண்டல உதவி செயற்பொறியாளரும், பூந்தமல்லி நெடுஞ்சாலைத்துறை உதவிப் பொறியாளரும் காவல்துறை உதவியுடன் இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்திட மேற்கூறியுள்ளவாறு உறுதி அளித்துள்ளதின் அடிப்படையில், வளசரவாக்கம் மண்டல அலுவலர் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியினைத் தொய்வின்றி மேற்கொண்டு நிறைவு செய்து அறிக்கை அளிக்க வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே இவ்வழக்கினை முடித்து வைத்து ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை வழங்கப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை)
கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவு,
பூந்தமல்லி பிரிவு, பஜார் ரோடு,
ஆவடி, சென்னை –600 054.
2. மண்டல அலுவலர்,
மண்டலம்–11, வளசரவாக்கம்,
சென்னை பெருநகர மாநகராட்சி,
சென்னை – 600 087.
3. உதவி செயற் பொறியாளர்,
மண்டலம்–11, வளசரவாக்கம்,
சென்னை பெருநகர மாநகராட்சி,
சென்னை – 600 087.

நகல்: முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர் (நிர்வாகம்),
பேரூராட்சிப் பிரிவு –3,
இ.கோ./உ.நரி –3

28/11/17